DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 4/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : தங்கபாண்டியன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 11.05.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 11th May 2026.

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது கோவில்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 8 வருடங்களுக்கு முன்பு பனவடலிச்சத்திரம் காவல்நிலையத்திற்கு எனது சொந்த வேலைக்காக சென்றபோது அங்கிருந்த போலீசார் என்னிடம் எழுதாத வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் பெற்றார்கள். அதில் என்ன எழுதப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது. எந்த வழககு சொத்தும் எனது முன்பு போலீசாரால் கைப்பற்றப்படவில்லை. **பார்வை மகஜரில்உள்ள 2 வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆகவும், அத்தாட்சியில் உள்ள 2 வது**

**கையொப்பம் அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிற**து. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**நீதிமன்ற விசாரணை**

கடந்த 23.04.2012ம் தேதி இரவு 11.15 மணிக்கு பனவடலிச்சத்திரம் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றும், சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் டார்ச் லைட் வெளிச்சத்திலும், தெருவிளக்கு வெளிச்சத்திலும், எனது முன்புக்கும், என் ஊரை சேர்ந்த துர்க்கைமுத்து என்பவர் முன்புக்கும் பார்வையிட்டு பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தார் என்றும், சம்பவ இடத்தில் புகார்தாரரின் கணவர் மகேந்திரன் என்பவரது TN 76 S 1665 என்ற பதிவெண் கொண்ட Hero Honda Splender Plus இருசக்கரவாகனத்தை வழக்கின் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் 23.30 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து எங்கள் முன்பு கைப்பற்றினார் என்றும் நான் போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை இல்லை.**